காலை முரசு

பக்கங்கள் - 21

## தொழிற்சங்க நடவடிக்கை மென்மேலும் தீவிரமாகும்!

***வைத்தியர்கள் எச்சரிக்கை***




தீர்க்கப்படாத தொழி சார் மற்றும் நிர் வாகப் பிரச்சினைகளைச் சுட் டிக்காட்டி, இலங்கை யின் இலவச பொதுச் சுகாதார 04▶

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | தை 26 திங்கட்கிழமை 09.02.2026 | அதிர்வு 193

# வடக்கு மக்களுக்கான அதிகாரத்தை வழங்க மாகாணத் தேர்தலை விரைந்து நடத்துங்கள்

## அநுர அரசிடம் நாமல் இப்படி இடித்துரைப்பு



"மாகாண சபைத் தேர்தலை நடத்தி, வடக்கு மக்களுக்கான அதிகாரத்தை வழங்க, அரசு விரைந்து செயற்பட வேண்டும்."

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

கம்பஹா - திஹாரிய பகுதியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றின் பின்னர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக் கையில், 04▶

# அவிசாவளையில் கோர விபத்து! காரில் பயணித்த மூவர் மரணம்!!

## *தீப்பற்றி எரிந்தது மோட்டார் சைக்கிள்*

அவிசாவளை, தல்துவ – அமிதி ரிகல பகுதியில் நேற்று இடம்பெற்ற கோர விபத்தில் மூவர் உயிரிழந் துள்ளனர்.

அதிவேகமாக வந்த கார் ஒன்று, மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் நேருக்கு நேர் மோதியுள்ளது.

மோதிய வேகத்தில் கார் அருகில் இருந்த பள்ளத்தில் கவிழ்ந்ததுடன், மோட்டார் சைக்கிள் தீப்பற்றி முற்றாக எரிந்துள்ளது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த ஐவர், உடனடியாக அவிசாவளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும், அங்கு சிகிச்சை பலனின்றி மூவர் உயிரிழந்துள்ளனர். காரில் பயணித்த மூவரே உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலி ஸார் மேலதிக விசாரணைகளை முன் னெடுத்து வருகின்றனர்.






விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அர சாங்கத்துக்கும் இடையில் பல்வேறு கட்டங் களில் சமாதான பேச்சுக்கள் இடம்பெற்றி ருக்கின்றன. மஹிந்த ராஜபக்ஷ தலைமையி லான அரசுடனான 'ஜெனிவா - ஒன்று' பேச்சுக்கள் வரை புலிகளின் தரப்புக்கு பெரும் பாலும் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கமே தலைமை வகித்து வந்திருக்கின்றார்.

அந்தப் பேச்சு வார்த்தைகளின் உள்ளும் புறமும் இடம்பெற்ற பல்வேறு விடயங்களை தவறாது அறிந்து கொள்ளும் வாய்ப்பு எனக்கு கிடைத்தே வந்திருக்கின்றது.

இந்தச் சமரச முயற்சிகளில் பல சமயங் களில் நோர்வே தரப்பும், அதேபோன்று சில சமயங்களில் பிற தரப்புக்களும் நடுநிலைத் தொடர்பாளர்களாக - அனுசரணையாளர்களாக -இணைப்பாளர்களாக-செயற்பட்டிருக்கிறார்கள். அத்தகைய தரப்புகளை கையாள்வதில் புலிகளின் பாணி - குறிப்பாக அன்ரன் பால சிங்கம் போன்றோரின் அணுகுமுறை -05▶

# கணக்காய்வாளர் நாயகம் நியமனம் சரியான பாதைக்கான முக்கிய நகர்வு

## முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய பாராட்டு



தேசிய கணக்காய்வாளர் திணைக் களத்துக்குள் இருந்தே கணக்காய்வாளர் நாயகம் ஒருவர் நியமிக்கப்பட்டிருப்ப தானது சரியான பாதையில் பயணிப் பதை முன்னிறுத்தி அரசமைப்புப் பேரவையினால் மேற்கொள்ளப்பட்ட மிக முக்கிய நகர்வாகும் என சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் கரு ஜயசூரிய சுட்டிக்காட்டி யுள்ளார்.

சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் கடந்த வாரம் நாடாளு மன்றக் கட்டடத்தொகுதியில் கூடிய அரசமைப்புப் பேரவை, தேசிய கணக் காய்வாளர் திணைக்களத்தின் சிரேஷ்ட பிரதி கணக்காய்வாளர் நாயகமான சமுதிகா ஜெயரத்னவை தலைமை கணக்காய்வாளர் நாயகமாக நியமிப்ப தற்கு ஏகமனதாக அனுமதி வழங்கி யதை அடுத்து, அவர் கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

இந்நிலையில் இந்நியமனம் குறித் தும், அரசமைப்புப் பேரவையின் உறுப் பினர்களாக சிவில் சமூகத்தின் சார்பில் புதிதாக மூவர் நியமிக்கப்பட்டிருப்பது குறித்தும் சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய அவரது உத்தியோகபூர்வ எக்ஸ் தளப்பக்கத்தில் பதிவொன்றைச் செய்துள்ளார்.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

”மிகக் காத்திரமான தற்போதைய சூழ்நிலையில் அரசமைப்புப் பேரவை யின் புதிய உறுப்பினர்களாக நியமிக்கப் பட்டிருக்கும் சிவில் சமூகப் பிரதிநிதிக ளுக்கு எமது வாழ்த்துக்களைக் கூறிக் கொள்கின்றோம். அதேவேளை தேசிய கணக்காய்வாளர் திணைக்களத்துக்குள் இருந்தே கணக்காய்வாளர் நாயகம் நியமிக்கப்பட்டிருப்பது சரியான பாதையில் பயணிப்பதற்கான முக்கிய நகர்வாகும்.

அதேவேளை, அரசமைப்பின் பிர காரம் ஸ்தாபிக்கப்பட்ட அரசமைப்புப் பேரவையானது சமநிலையான ஆட்சி யியல் நிர்வாகத்தின் அடிப்படைத் தூ ணாகும். அதன்படி வெவ்வேறு அரசுக ளின் அச்சுறுத்தல்கள் மற்றும் அழுத் தங்களுக்கு மத்தியிலும் தமது நிலைப் பாடுகள் மற்றும் அரசமைப்புசார் கோட் பாடுகளில் உறுதியாக நின்று, தற்போது பதவிக்காலம் நிறைவடைந்து செல்லும் மூன்று சிவில் சமூக உறுப்பினர்களை நாம் பெரிதும் பாராட்டுகின்றோம்.” - என்றுள்ளது.



# இலங்கையில் ஒரே நாளில் 788 பேர் போதைப்பொருள்களுடன் சிக்கினர்

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய, நாட்டில் போதைப்பொருளை தடுக்கும் நோக்கிலான “முழு நாடுமே ஒன்றாக” எனும் தேசிய திட்டத்தின் கீழ் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் சுமார் 788 பேர் போதைப்பொருள்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள் ளது.

அத்துடன், தடுப்புக்காவல் உத்தரவு பெற்ற 16 பேரும், சட்டவிரோத சொத் துக்கள் தொடர்பான விசார ணைக ளுக்கமைய 3 பேரும் கைது செய்யப் பட்டுள்ளனர்.

இதேவேளை, 805 சோதனைகள் நடத்தப்பட்டுள்ளதுடன், 7 பேர் புனர் வாழ்வு நிலையத்துக்கு அனுப்பிவைக்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளின்போது சிக்கிய சந்தேகநபர்கள் வைத்திருந்த போதைப் பொருட்களையும் இதன்போது பொலி ஸார் கைப்பற்றியுள்ளனர்.

அதற்கமைய, சந்தேகநபர்களிடமி ருந்து, 252 கிராம் ஹெரோயின், 347 கிராம் ஐஸ், 582 கிலோகிராம் 751 கிராம் கஞ்சா, 50 கஞ்சா செடிகள், 140 கிராம் குஷ் ரக போதைப்பொருள், 25 கிராம் ஹஷீஷ் ரக போதைப்பொருள், 1,701 போதை மாத்திரைகள், 134 கிராம் 600 மில்லிகிராம் மதனமோதகம் மற்றும் 3 கிலோகிராம் 288 கிராம் மாவா போதைப்பொருள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள் ளன.

# மாகாண சபைத் தேர்தல் இவ்வருடம் நடைபெறாது!

## முழு விளக்கத்துடன் ஜெனிவா செல்லும் அரசு



இலங்கையில் மாகாண சபைத் தேர்தல் இவ்வருடம் நடைபெறும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அதனை அடுத்த வருடத்துக்கு ஒத்திவைக்க தேசிய மக்கள் சக்தி அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

மாகாண சபை தேர்தல், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவகாரம், புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் உட்பட தேசிய நல்லிணக்கப் பொறிமுறையின் பூரண விளக்கத்துடன் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தலைமையிலான சிறப்பு இராஜதந்திரிகள் குழு ஜெனிவாக் கூட்டத் தொடரில் கலந்து கொள்ளவுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 61 ஆவது கூட்டத் தொடர் எதிர்வரும் 23 ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ளது. அதில் கலந்து கொள்வதற்காக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தலைமையிலான இலங்கையின் உயர்மட்ட இராஜதந்திரிகள் குழு செல்லவுள்ளது.

இதன்போது இலங்கையின் பொறுப்புக்கூறல் மற்றும் தேசிய நல்லிணக்கப் பொறிமுறைகள் குறித்து முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது. அத்துடன் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை ஜெனிவா செல்வதற்கு முன்னர் நிறைவேற்ற அரசு திட்டமிட்டுள்ளது.

மறுபுறம் தேசிய மற்றும் சர்வதேச சமூகத்தால் வலியுறுத்தப்படும் மாகாண சபைத் தேர்தல் குறித்து அரசின் செயற்பாடுகள் உற்சாகமாக இல்லை. பெரும்பாலும் இந்தத் தேர்தலை அடுத்த வருடத்துக்கு ஒத்திவைக்கவே அரசு ஆர்வம் காட்டி வருகின்றது.

தேர்தல் முறைமை மற்றும் புலம்பெயர் இலங்கையர்களுக்கு வாக்களிக்கும் உரிமை போன்ற காரணிகளின் அடிப்படையில் மாகாண சபைத் தேர்தலை அடுத்த வருடத்துக்கு ஒத்திவைக்க அரசு திட்டமிட்டுள்ளது.

அத்துடன் நீண்ட காலமாகத் தாமதமாகி வரும் மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக வழிகாட்டுதல் கோரி தேர்தல் ஆணைக்குழு, ஜனாதிபதி செயலகத்துக்குப் பல கடிதங்களை அனுப்பியுள்ளது என்றும், ஆனால் இதுவரை ஜனாதிபதி செயலகத்தில் இருந்து எந்தப் பதிலும் கிடைக்கவில்லை என்றும் ஆணைக் குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான சட்ட ரீதியான தடைகள் குறித்து விளக்கம் கோரி ஜனாதிபதி செயலகத்துக்குச் சுமார் நான்கு கடிதங்களை அனுப்பியுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.எனவே, மாகாண சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பாக தேர்தல் ஆணைக் குழுவால் எதுவும் செய்ய முடியாது என்பதுடன், தேர்தல் குறித்த முடிவு தற்போது சட்டத் திருத்தங்களைச் சார்ந்துள்ளது.

இந்த விவகாரம் குறித்து ஆராய்ந்து அறிக்கை அளிக்க நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை நியமிக்க அரசு நடவடிக்கை எடுத்திருந்தாலும், அதற்கு அரச பிரதிநிதிகளை நியமிக்க இன்னும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

எதிர்க்கட்சி தனது நான்கு பிரதிநிதிகளாக ரஞ்சித் மத்தும பண்டார, மனோ கணேசன், நிசாம் காரியப்பர் மற்றும் சாணக்கியன் இராசமாணிக்கம் ஆகியோரை நியமித்துள்ளது. இருப்பினும் அரசு இதுவரை தனது 12 பிரதிநிதிகளை பரிந்துரைக்கத் தவறியதால் தெரிவுக்குழு கூட முடியவில்லை. இவ்வாறானதொரு சூழ்நிலையிலேயே மாகாண சபைத் தேர்தல் குறித்து ஜெனிவாவில் அரசு தெளிவுபடுத்தவுள்ளது.

# சஜித் அணி வேட்பாளரை இலக்குவைத்து இரண்டாவது தடவையும் துப்பாக்கிச்சூடு!


## குறி தவறியதால் தோல்வி

களுத்துறை மாநகர சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் சார்பில் போட்டியிட்ட வேட்பாளரை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூடு தோல்வியடைந்துள்ளது.

இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும், அது குறி தவறியதால் தோல்வியடைந்துள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களுத்துறை மாநகர சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் சார்பில் போட்டியிட்ட வேட்பாளரான பந்துல பிரசன்ன என்பவரைக் குறி வைத்தே துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவரை இலக்கு வைத்து கடந்த 9 மாதங்களுக்கு முன்னரும் துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது என்றும், அதுவும் குறி தவறியதால் தோல்வியடைந்தது என்றும் குறிப்பிடப்படுகின்றது.




நேற்றுமுன்தினம் இரவு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட இடத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் போது, பிஸ்டலுக்குப் பயன்படுத்தப்படும் தோட்டா ஒன்றும், கைபேசி ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

# இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரிப்பு 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில்

இலங்கை முழுவதும் உள்ள நீதிமன்றங்களில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்று தேசிய குழந்தைகள் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

1998 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க குற்றவியல் நடைமுறை திருத்தச் சட்டத்தின்படி இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப் படுகின்றது.

அதன்படி, நாடு முழுவதும் உள்ள நீதிமன்றங்களில் 4 ஆயிரத்து 289 வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன என்று கூறப்படுகின்றது.

இந்த வழக்குகளில் 1,683 வழக்குகள் இவ்வருடம் ஜனவரி மாதம் எடுத்துக்கொள்ளப்பட்டன என்றும் தேசிய குழந்தைகள் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.



ஆபாச படங்களை இடுகையிடுதல், பாலியல் வன்கொடுமை செய்தல், குழந்தைகளைப் பாலியல் வன்கொடுமைக்கு அமர்த்துதல் அல்லது பணிய மர்த்தல், அவர்களைக் கொடுமைப் படுத்துதல் போன்ற குற்றங்கள் தொடர்பாக நீதிமன்றங்களில் குற்றப்பத் திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## வடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

“வடக்கு, கிழக்கு மக்களுக்காக மாகாண சபைத் தேர்தலை அரசு நடத்த வேண்டும்.

நாட்டில் அடுத்து நடத்தப்படவுள்ள எந்தவொரு தேர்தலையும் சந்திப்பதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தயாராகவுள்ளது.

இதற்காக, கிராமிய மட்டத்தில் எமது அரசியல் குழுக்களைப் பலப்படுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப் படுகின்றன.

இதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஏனைய கட்சிகளுடன் இணைந்து தேர்தலை எதிர்கொள்வது தொடர்பில் எந்தவித தீர்மானங்களும் மேற்கொள்ளப்படவில்லை.” – என்றார்.

## தொழிற்சங்க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் வைத்தியசாலைக் கட்டமைப்பைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டு தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் தொழிற்சங்க நடவடிக்கையை மென் மேலும் தீவிரப்படுத்தத் தயாராகவுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது. அதற்கமைய எதிர்வரும் 11ஆம் திகதி தமது அடுத்த கட்ட தொழிற்சங்க நடவடிக்கை குறித்து தீர்க்கமான முடிவொன்று எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில், நாடு தழுவிய ரீதியிலான தொழிற்சங்க நடவடிக்கையைத் தொடர தமது மத்திய செயற்குழு ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவ சமூகம் நீண்டகாலமாக எதிர்கொண்டு வரும் தொழில்சார் சவால்களையே இந்த நடவடிக்கை பிரதிபலிக்கின்றது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலதிக வசதிகள் அல்லது கொடுப்பனவுகள் அன்றி, பெரும்பாலும் தனிப்பட்ட அபாயங்களுக்கு மத்தியில் உத்தியோகபூர்வ சேவைத் தேவைகளுக்கு அப்பால் வைத்தியர்கள் ஆற்றி வந்த பணிகளிலிருந்து விலகியிருப்பதே தற்போதைய நடவடிக்கையாகும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன் விளைவாக பொதுமக்களுக்கு ஏற்படும்எந்தவொருஅசௌகரியத்துக்கும் அரசும் சுகாதார அமைச்சருமே பொறுப்பேற்க வேண்டும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அதேவேளை, இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை மருத்துவ இடமாற்றங்களுடன் தொடர்புடையது எனச் சில தரப்பினரால் பரப்பப்படும் கருத்துக்களை அந்தச் சங்கம் நிராகரித்துள்ளது.

இடமாற்றங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளுக்கு இணங்க கண்டிப்பாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதே தமது நிலைப்பாடு என்றும் அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

எவ்வாறாயினும், சுகாதார அமைச்சின் சில சிரேஷ்ட அதிகாரிகளின் திறமையின்மை காரணமாக சுமார் 8ஆயிரம் மருத்துவ இடமாற்றங்கள் இதுவரை முறையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

சில அதிகாரிகளால் சுகாதார அமைச்சருக்கு வழங்கப்பட்ட தவறான தகவல்களால் முரண்பாடான பகிரங்க அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன என்றும், இது அமைச்சுக்கும் அமைச்சரின் நற்பெயருக்கும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்றும் மேலும் குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது.

அரசியல் தலையீடின்றி முறையான நடைமுறைகளின் கீழ் மருத்துவ இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று 23 ஆயிரம் உறுப்பினர்களைக் கொண்ட தமது சங்கம் கோருகின்றது என்றும், தற்போதைய தொழிற்சங்க நடவடிக்கை பரந்த அளவிலான கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டது என்றும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அனைத்து வகை வைத்தியர்களையும் உள்ளடக்கிய பிரத்தியேகமான இலங்கை வைத்திய சேவை ஒன்றை உருவாக்குவதற்கான அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெறுதல், 22/99 சுற்றறிக்கைக்கு இணங்க போக்குவரத்து தொடர்பான சிக்கல்களைத் தீர்த்தல், மேலதிக பணி கொடுப்பனவை நிரந்தரப் பலனாக மாற்றுதல், ஆய்வு கொடுப்பனவு தொடர்பான சிக்கல்களைத் தீர்த்தல், முதுகலை பயிற்சி வைத்தியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணல் மற்றும் பொதுச்சுகாதாரக் கட்டமைப்பில் அங்கீகரிக்கப்பட்ட வைத்தியர்களின் எண்ணிக்கையை இற்றைப்படுத்துதல் ஆகியன இந்தக் கோரிக்கைகளில் அடங்கும்.

எழுப்பப்பட்டுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நிதி அமைச்சுடன் ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் பேச்சுகளை நடத்துமாறும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கோரியுள்ளது.

அரசும் சுகாதார அமைச்சும் தமது கோரிக்கைகளைத் தொடர்ந்து புறக்கணித்தால், தொழிற்சங்க நடவடிக்கையை மேலும் தீவிரப்படுத்த ஏகமனதாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்தச் சங்கம் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன் அடுத்த கட்டமாக, பொதுச் சுகாதாரத் துறையின் சவால்கள் குறித்து கலந்துரையாடுவதற்காக எதிர்வரும் 11ஆம் திகதி நாடு தழுவிய ரீதியில் உள்ள அனைத்து சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் மேலதிக சுகாதார வைத்திய அதிகாரிகள் சங்கத் தலைமையகத்துக்கு அழைக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் சந்திப்பைத் தொடர்ந்து எடுக்கப்படும் முடிவுகள் எதிர்கால தொழிற்சங்க நடவடிக்கைகளைத் தீர்மானிக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எப்போதும் கறாராகவும் தெளிவாகவும் இருந்து வந்திருப்பதை நான் பார்த்திருக்கிறேன்.

இரண்டு தரப்புகளுக்கு இடையில் நடுநிலையாளர் - இணைப்பாளர் - தொடர்பாடல் பணியை வகிப்பவர்- பக்கச் சார்பின்றி இரண்டு அல்லது எல்லா தரப்புகளுக்கும் நேர்மையுடன் செயல்பட வேண்டும். அதை எப்போதும் புலிகள் வலியுறுத்தி வந்திருக்கிறார்கள்.

இந்த விடயத்தை இப்போது நான் நினைவூட்டிக் குறிப்பிடுவதற்கு ஒரு காரணமும் உண்டு.

அண்மையில் இலங்கையில் இருக்கின்ற முக்கிய கட்சிகளின் பிரதிநிதிகளை சுவிஸ் தன்னுடைய நாட்டுக்கு அழைத்து இனப்பிரச்சினை தீர்வுக்கான சில சமரச முயற்சிகளுக்கான பூர்வாங்க நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்தது.

இந்த சமரச முயற்சிகளின் அடுத்த கட்டமாக தமிழர்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தை பொறுத்தமட்டில் சகல தமிழ்த் தேசிய கட்சிகளும் ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வருவது குறித்த ஒரு சந்திப்புக்கு சுவிஸ் தூதரகம் ஏற்பாடு செய்திருந்தது.

இந்தச் சந்திப்பு வரும் 19 ஆம் திகதி எந்தவித ஆரவாரமும் வெளிப்படுத்தலும் இன்றி, இரகசியமான முறையில் நடைபெறும் என ஏற்பாட்டாளர்கள் மட்டத்தில் கூறப்பட்ட போதிலும், அது பற்றிய விடயம் ஏற்கனவே விவகாரமாக - விவரமாக - வெளியாகி விட்டது.

அந்தச் சந்திப்பில் பங்குபற்றும் தரப்புக்களின் - கட்சிகளின் - பிரதிநிதிகள் யார், யார் என்பதை சுவிஸ் தூதரகமே தீர்மானித்ததாகவும், அது தமிழர் தரப்பில் ஒரு கட்சியின் பிரதிநிதி ஒருவருடனான பரிந்துரையில் முன்னெடுக்கப்பட்ட தீர்மானமாக இருந்தது என்றும் மற்றைய கட்சிகள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டது.

தமிழர் தரப்பில் பிரதான அரசியல் கட்சி தமிழரசுக் கட்சிதான். அதன் சார்பில் இன்னார், இன்னார்தான் பங்கு பற்ற வேண்டும் என்ற தீர்மானத்தை கட்சி எடுக்காமல், ஏற்பாட்டாளர்கள் எடுத்திருப்பதாகத் தெரிகிறது. இது கட்சித் தலைமையை சற்று அதிருப்திக்குள் ஆழ்த்தியிருப்பதாக அறிய வந்தது.

பிறிதொரு கட்சியின் தலைவர் மட்டும் தம்முடன் வருகின்ற தமது கட்சிப் பிரதிநிதியைத் தீர்மானிக்கவும், கட்சி சாராத ஒரு சட்டத்தரணியை இந்தக் கூட்டத்தில் பங்கு பற்றச் செய்யவும் இயலுமானவராக இருக்கின்றமை இந்த முயற்சியில் சுவிஸின் நடுநிலைத் தன்மை குறித்து கேள்வியை எழுப்பி இருக்கின்றது.

சுவிஸ் தூதுவரின் மத்தியஸ்தத்தில் நடைபெறவிருப்பதாகக் கூறப்படும் இந்தச் சந்திப்பு இரகசியமானதாகவும் தீர்மானகரமானதாகவும் இருக்கும் என்று தூதரக மட்டத்தில் கோடி காட்டப்பட்ட பின்னணியில், அந்தச் சந்திப்புக்கு இடையில் அவ்விடயத்தில் தன்னுடைய அரசியல் கைவரிசையை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, அதன் தமிழ்த் தேசியப் பேரவையின் பெயரில் - ஏற்பாட்டில் - தொடங்கி விட்டது.

சுவிஸ் தரப்பு என்ன விவகாரத்துக்காக இந்த முயற்சியை ஆரம்பித்ததோ அதே வேலையை அதற்குச் சமாந்தரமாக தானும் ஆரம்பித்திருப்பதாகக் காட்டுகின்றது கஜேந்திரகுமார் அண்ட் கோ.

அரசு கொண்டுவர இருக்கும் 'ஏக்கிய ராஜ்ஜிய' (ஒற்றையாட்சி) வடிவத்தை நிராகரித்து, அதற்குப் பதிலாக கூட்டாட்சி (சமஷ்டி) தீர்வை ஒரே குரலில் முன்னெடுத்துச் செல்வதற்கு என்ற பெயரில் அனைத்துத் தமிழ் கட்சிகளையும் கூட்டி ஒரு கூட்டத்தை நடத்துவதற்கு தமிழ் தேசிய பேரவையின் பெயரில் அழைப்பு விடுக்கப்பட்டுளது. தமிழரசுக் கட்சிக்கும் அழைப்புக் கடிதம் ஒன்றை வழங்கி இருக்கின்றது தமிழ் தேசிய பேரவை. அந்த சந்திப்பை யாழ்ப்பாணத்தில் 15 ஆம் திகதி - அதாவது சுவிஸ் நடத்துகின்ற கூட்டத்துக்கு நான்கு நாள்களுக்கு முன்னர் - தங்கள் பேரவையின் ஏற்பாட்டில் நடத்துவதாக கஜேந்திரகுமார் அண்ட் கோ முஸ்தீபு செய்து இருக்கிறது.

இந்த வேலையை தமிழ்த் தேசிய பேரவை செய்வதானால் சுவிஸ் முயற்சி எதற்கு? அதனை, பின் நாள்களில் தங்கள் நகர்த்தலின் தொடராகக் காட்டுவதற்காகவே அதற்குப் போட்டியாக இன்னொரு நகர்வை திடுதிப்பென குசும்புத்தனமாக ஆரம்பித்திருக்கிறது அந்த சைக்கிள் கம்பனி. அதுவும் 'ஏக்கிய ராஜ்ய' என்ற தன்னுடைய வழமையான குடைச்சல பாணியில்.

தமிழரின் தேசிய இனப் பிரச்சினை தீர்வு முயற்சி என்ற பெயரில் சைக்கிள் கம்பனி இப்போது தொடங்கி இருக்கும் சண்ட பிரசண்டம் தொடர்பில் பின்வரும் விடயங்களைச் சுட்டிக்காட்டுவது பொருத்தமானது என நினைக்கிறேன்.

★ ஒன்று - 2016 தொடக்கம் 2019 வரையான காலகட்டத்தில் நல்லாட்சி அரசில் முன்னெடுக்கப்பட்ட அரசமைப்பு முயற்சியில் 'ஏக்கிய ராஜ்ஜிய' என்று குறிப்பிடப்பட்டது ஒற்றை ஆட்சி அல்ல. அது 'ஒருமித்த நாடு' என்பதையே அந்த இடத்தில் குறிக்கின்றது என்பது அதிலேயே தெளிவுபடுத்தப் பட்டுள்ளது. ஒற்றை ஆட்சி என்ற சிங்கள சொல்லின் பதம் வேறு. அது பற்றி தமிழரசு பல தடவைகள் விளக்கமளித்த பின்னரும் எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்ற கணக்காக 'ஏக்கிய ராஜ்ய' தீர்வு என்று மீண்டும் மீண்டும் அந்த முயற்சிக்கு தவறான அர்த்தத்தில் பட்டை அடித்துக் கொண்டிருக்கின்றது சைக்கிள் கம்பனி.

★ அடுத்தது - நல்லாட்சி அரசில் அந்த அரசினால் கடைசியாக சமர்ப்பிக்கப்பட்ட அரசமைப்புக்கான நகல் வரைவை இலங்கைத் தமிழரசு கட்சியும் ஏற்றுக்கொள்ளவில்லை. இப்போது ஆட்சியில் இருக்கும் தேசிய மக்கள் சக்தியும் ஏற்றுக்கொள்ளவில்லை. அதனைக் கடைசியாக தமிழ் கட்சிகளை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க சந்தித்தபோது கஜேந்திர குமார் பொன்னம்பலத்தையும் வைத்துக்கொண்டு நேரடியாக தெரிவித்திருக்கிறார். ஆகவே அந்த தீர்வு யோசனையை (அதனை 'ஏக்கிய ராஜ்ய' தீர்வு என்று சைக்கிள் கம்பனி இப்போது தவறான அர்த்தப்படுத்தலுடன் அழைக்கின்றது) தற்போது மட்டுமல்ல, எப்போதுமே இந்த அரசு முன் வைக்கப் போவதில்லை என்பது தெளிவானது.

★ மற்றது - அரசு தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வாக எந்த யோசனையையும் முன் வைப்பதாகவோ அல்லது இருக்கின்ற நகலை முன்னிறுத்த போவதாகவோ எந்த சமிக்ஞையையும் வெளிப்படுத்தாத நிலையில், ஏதோ ஒன்று வரப்போவதாக காட்டி, சுவிஸ் கூட்டத்துக்கு முன்னர் தான் ஒரு கூட்டத்தை சைக்கிள் கம்பனி விழுந்தடித்து ஆரம்பித்திருப்பது எதற்காக?

சுவிஸின் முயற்சியில் தமிழ்க் கட்சிகள் ஒன்று சேர்ந்து ஓர் இணக்கமான தீர்வை கொழும்பு அரசுக்கு அழுத்தமாக முன் வைக்க முன்னர், அதற்குள் குசும்புத்தனம் பண்ணி, அதனைக் குழப்பும் தனது வழமையான பாணியாகவே 19ஆம் திகதி கூட்டத்திற்கு முன்னர் இந்த 15 ஆம் திகதிக் கூட்டத்திற்கு சைக்கிள் கம்பனி கயிறு கொடுத்திருக்கின்றது என்பது தெளிவு.

எது, எப்படி என்றாலும் சைக்கிள் கம்பனியின் உத்தேச கூட்டத்தில் தமிழரசுக் கட்சி பங்குபற்றுமா என்பது கேள்விக்குறிதான். நான் ஏற்கனவே இப்பத்தியில் சுட்டிக் காட்டியபடி தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தம்முடைய சொந்தப் பயணமாக எதிர்வரும் 14ஆம் திகதியே மேற்கு நாடு ஒன்றுக்குச் செல்லுகின்றார். அவர் பத்து நாளகளுக்கு மேல் நாட்டில் இருக்க மாட்டார்.

அந்தச் சூழ்நிலையில், அவர் இல்லாத சமயத்தில் சுவிஸ் ஏற்பாட்டிலான கூட்டத்தைக் குழப்பும் விதத்தில் சைக்கிள் கம்பனி விடுத்திருக்கும் அழைப்பை சுமந்திரன் தரப்பு சாதகமாக பரிசீலித்து அதில் கலந்து கொள்ளுமா என்பது ஐயமே.

சைக்கிள் கம்பனியின் இந்த கூட்டத்தில் இப்போதைய அரசியல் சூழ்நிலையில் தமிழரசோடு நிலை எடுத்திருக்கும் பிற தமிழ்க் கட்சிகளும் பங்குபற்றுமா என்பதையும் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

சமரச முயற்சிகளில் ஈடுபடும் தரப்புகளை கையாள்வதில் புலிகளின் கறார் தன்மையை தமிழரசும் பின்பற்றுமா என்பதையும் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

# யாழ். சண்டிலிப்பாய் பகுதியில் இளைஞர் ஒருவர் சடலமாக மீட்பு!

யாழ். மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சண்டிலிப்பாய் பகுதியில், இளைஞர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வாய்க்காலின் வான்கதவில் தூக்கில் தொங்கிய நிலையிலேயே இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## இவரால் முடியாது!

பொலிஸ்காரன், கொள்ளைக்காரன் இருவருமே ஆயுதங்கள் வைத்திருந்தாலும் இருவரையும் சட்டவிரோத ஆயுததாரிகள் என்று கையாள முடியுமா? முடியாதல்லவா? இருவரையுமே சட்டவிரோத ஆயுததாரிகளாக விமர்சனம் செய்தால் அது எப்படி இருக்குமோ அப்படி ஒரு விடயத்தை முன்வைக்கின்றார் இலங்கையின் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க.

தங்களுடைய இருப்புக்கான - இனத்தின் கௌரவத்திற்கான - வாழ்வியல் உரித்துகளுக்காக - அடிப்படை உரிமைகளுக்காக - தமிழினம் போராடுவதையும் 'இனவாதம்' என்கிறார் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க.

அதேவேளை தமிழர்களை அடக்கி, ஒடுக்கி அவர்கள் மீது பௌத்த - சிங்கள பேரினவாத மேலாதிக்கத்தை செலுத்த விரும்பும் பேரின வெறியர்களையும் இனவாதிகள் என்கிறார் அவர்.

உரித்துக்காகப் போராடும் தமிழர்களையும், அவர்களை அடக்கி ஆள முனையும் பேரினத்தவர்களையும் ஒரே தராசில் 'இனவாதிகள்' என்று விமர்சிக்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்ககவின் அணுகுமுறை இலங்கைத் தீவில் அடக்கி ஒடுக்கப்பட்டு, அவலப்பட்டு, அல்லற்பட்டு, அழிந்து கொண்டிருக்கும் தமிழினத்திற்கு நீதியைத் தேடி தராது என்பது நிச்சயமானது.

பாதிக்கப்பட்ட தரப்பின்பால் பரிவும், அடக்கு முறையைத் தூண்டிவிடும் தரப்புகளுக்கு எதிராக கடும் நடவடிக்கையும் எடுப்பதுதான் நீதி செய்யும் மாண்பு. ஆனால் தமது பதவியையும் அதிகாரத்தையும் தக்க வைப்பதற்காக பாதிக்கப்பட்ட தரப்பையும் பாதிப்பை ஏற்படுத்தும் தரப்பையும் ஒன்று போல கருதி தத்துவம் பேசுகிறார் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க.

"நாட்டை ஒன்றிணைப்பதற்கு இரு குழுக்கள் தடையாகவுள்ளன. ஒரு தரப்பினர் - வடக்கில் இருக்கும் தமிழ் இனவாதிகள். மற்றைய தரப்பினர் - தென் பகுதியிலுள்ள சிங்கள இனவாதிகள். இவர்கள் வடக்கில் இருக்கும் விகாரைக்குச் சென்று போயா தினத்தில் விகாரையை அகற்றுமாறு கூச்சலிடுகின்றனர். அதற்குச் சமமாக தென் பகுதி இனவாதிகள் அதே விகாரைக்குப் போயா தினத்தில் செல்வது குழப்பதை ஏற்படுத்துவதற்கே தவிர வேறு ஒன்றுக்குமில்லை" - என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க இரண்டொரு தினங்களுக்கு முன்னர் மீண்டும் தெரிவித்துள்ளார்.

தையிட்டி சட்டவிரோத விகாரை விடயத்தில் தங்களுக்கு எதிராகப் பேரினவாதம் வரிந்து கட்டிக்கொண்டு அடக்குமுறை நடவடிக்கையை முன்னெடுத்து இருக்கின்றது என்பது தமிழர்களின் குற்றச்சாட்டு. அதுவே ஆதங்கம். எரிச்சல். எல்லாமுமே.

அந்த விடயத்தில் பாதிக்கப்பட்ட தரப்புக்கு நீதி செய்யும் முதுகுத்திராணி - நேர்மையான ஆட்சிக்கான திடசங்கற்பம் - உண்மை மீது பற்றுறுதி - ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கு அறவே இல்லை. அதனால் அடக்கப்பட்ட இனத்தின் அவலக் குரலையும் அடக்கும் இனத்தின் அட்டூழிய கர்ச்சனையையும் ஒன்றாக - சமமாக - அவர் கருதி கருத்து வெளியிடுகிறார். இத்தகைய ஒரு தலைவரால் இலங்கையின் நீண்ட கால இனப் பிரச்சினைக்கு நீதி, நியாயமான - நின்று, நிலைத்து நீடிக்கக்கூடிய - ஒரு கௌரவமான தீர்வை தரவே முடியாது என்பதுதான் அவரது அணுகு முறையில் இருந்து வெளிப்படுகின்றது.





# ஐக்கிய மக்கள் சக்தி ஸ்தாபிக்கப்பட்டு ஆறு வருடங்கள்: கதிர்காமம் கிரிவெஹெரவில் பல புண்ணிய நிகழ்வுகள்

ஐக்கிய மக்கள் சக்தி ஸ்தாபிக்கப்பட்டு ஆறு வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு நாட்டு மக்களுக்கு ஆசி வேண்டி வரலாற்று சிறப்பு மிக்க புனித கதிர்காமம் கிரிவெஹெர விகாரை வளாகத்தில் கடந்த இரண்டு நாள்களாக பல்வேறு சமய நிகழ்வுகள் இடம்பெற்றன.

சிறப்பு பூஜை வழிபாடுகள் மஹாசென் தேவாலயத்தில் இடம்பெற்றன. இதனைத் தொடர்ந்து அஷ்டபலபோதியா வில் சமய அனுஷ்டானங்கள் நடந்தன.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச புனித அரச மரத்திற்கு அட்டபிரிகரை வழங்கினார்.

மத அனுஷ்டானங்களைத் தொடர்ந்து தூபிக்கான சிறப்பு வஸ்திர (கப்ருக்க) பூஜை இடம்பெற்றன.

தொடர்ந்து முழு இரவு பிரித் பிரசங்கம் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து மகா சங்கத்தினருக்கு பிரிகர மற்றும் காலை நேர தானம் வழங்கி வைக்கப் பட்டன.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேம தாஸ கலந்து கொண்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் தலைவர்கள், கட்சியின் தேர்தல் தொகுதி அமைப்பாளர்கள், கட்சியோடு இணைந்த பிரிவுகளின் தலைவர்கள், கட்சியின் செயற்பாட்டாளர்கள் மற்றும் பிரதேச மக்கள் என ஏராளமானோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

2020 ஜனவரி மாதத்தில் ஸ்தாபிக் கப்பட்ட ஐக்கிய மக்கள் சக்தி, நாட்டில் முற்போக்காக கல்வி, சுகாதாரம் மற்றும் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துதல் எனப் பல்வேறு சமூக மற்றும் அரசியல் ரீதியிலான உன்னத சேவைகளை முன் னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



















### அயர்லாந்தை வீழ்த்தி

# முதல் போட்டியிலேயே வெற்றி பெற்ற இலங்கை

ஐ.சி.சி. ரி 20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் 6 ஆவது போட்டி நேற்று நடைபெற்றது

கொழும்பு ஆர். பிரேமதாஸ விளையாட்டரங்கில் நடைபெற்ற இந்தப் போட்டியில் இலங்கை மற்றும் அயர்லாந்து ஆகிய அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அயர்லாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகளை இழந்து 163 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

164 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணி 19.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 143 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.












### வடக்கு மாகாணத்தில்

# வங்கிக் கடன் சவாலுக்குத் தீர்வு தேடல்: ஆளுநர் தலைமையில் கலந்துரையாடல்

வடக்கு மாகாணத்தில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் மற்றும் புதிய தொழில் முயற்சியாளர்கள் வங்கிக் கடன்களைப் பெற்றுக்கொள்வதில் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அதற்கான தீர்வுகள் குறித்த விசேட கலந்துரையாடல், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனின் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

அரசு உற்பத்திப் பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் நோக்கில் பல்வேறு கடன் திட்டங்களை அறிமுகப்படுத்தி வருகின்ற போதிலும், அத்தகவல்கள் உரிய காலத்தில் தொழில் முயற்சியாளர்களைச் சென்றடைவதில்லை என்ற விடயம் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.

ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில், அதிக தேவைப்பாடுள்ள வடக்கு மாகாணத்திலேயே இத்தகைய கடன்களைப் பெறுபவர்களின் எண்ணிக்கை குறைவாகக் காணப்படுகின்றமை குறித்தும், அதற்கான காரணங்கள் குறித்தும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

வங்கிகளின் கிளை முகாமையாளர்கள் சில கடன் திட்டங்களுக்கு மேலதிக நிபந்தனைகளை விதிப்பதாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

அதேவேளை, வடக்கில் பல தொழில் முயற்சியாளர்கள் முறையான “வியாபார பெயர்ப் பதிவை“ மேற்கொள்ளாமை மற்றும் வங்கிகளின் அடிப்படை நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யத் தவறுவதாலேயே கடன்களைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை இழப்பதாக வங்கி முகாமையாளர்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டது.

இச்சவால்களை முறியடிக்கும் வகையில், தொழில் முயற்சியாளர்களுக்குக் கடன் பெறுவதற்கான ஆலோசனைகளை வழங்குவதற்கும், வங்கிகளின் நிபந்தனைகள் குறித்துத் தெளிவுபடுத்துவதற்கும் புதிய பொறிமுறை ஒன்றை உருவாக்கத் தீர்மானிக்கப்பட்டது.

இதற்கமைய, இலங்கை மத்திய வங்கியின் வடபிராந்திய அலுவலகத்தில், ஒவ்வொரு மாதமும் ஒரு வங்கியின் பங்களிப்புடன், தொழில் முயற்சியாளர்களுக்கான விழிப்புணர்வு மற்றும் வழிகாட்டல் கருத்தரங்குகளைத் தொடர்ச்சியாக நடத்துவதற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் இலங்கை மத்திய வங்கியின் வடபிராந்திய முகாமையாளர், அரச மற்றும் தனியார் வங்கிகளின் பிராந்திய முகாமையாளர்கள், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுடன் தொடர்புடைய அரச திணைக்களத் தலைவர்கள் மற்றும் ஆளுநரின் ஆலோசனைக்குழு உறுப்பினர் கலாநிதி அகிலன் கதிர்காமர் தலைமையிலான குழுவினரும் கலந்துகொண்டனர்.


















# வடமராட்சி கிழக்குப் பகுதியில் 400 ஏக்கர் காணியை வாங்கும் தனியார் நிறுவன முயற்சி பலனளிக்கவில்லை

(பூ.லின்ரன், மரியசீலன் திலைக்ஸ்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு மணல்காடு குடத்தனை வடக்கு, பொற்பதி குடத்தனை கிழக்கு கிராம சேவகர் பிரிவுகளில் தனியார் ஒருவருக்கு கோல்வ் விளையாட்டுக்களுடன் கூடிய சுற்றுலா, பொழுதுபோக்கு மையங்கள் அமைப்பதற்காக 400 ஏக்கர் காணியை பெற்றுக்கொள்ளும் நோக்கில் நேற்றைய தினம் அந்தத் தனியார நிறுவனத்தால் மணல்காடு, குடத்தனை வடக்கு, பொற்பதி கிராம மக்களுடனான கலந்துரையாடல் மணல்காட்டில் இடம் பெற்றது.

அந்தத் தனியார் நிறுவனம் இக் கலந்துரையாடலில் மக்களிடம் காணியை பெற்றுக்கொள்வதற்காகவிருப்பம்கோரிய போது அந்தப் பிரதேச மக்களால் தமது கிராமச் சூழலில் காணிகளை வழங்க முடியாது என திட்ட வட்டமாகத் தெரிவிக் கப்பட்டது..

இது தொடர்பாக ஊடங்களுக்கு கருத்து தெரிவித்த பிரதேச மக்கள், தமது மணல்காடு கிராமத்தில் தற்போது 450 க்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்துவருகின்றன எனவும், இதில் 150 பேருக்கு மேற்பட்ட குடும்பங்கள் கணி இல்லாமல் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் வசித்து வருகின்றனர் எனவும், தமது கிரகத்தை சூழவுள்ள பகுதியில் 156 ஏக்கர் காணி மட்டுமே உள்ளது எனவும், இதனால் தமது கிராமத்தில் காணி இல்லாதோர்க்குக் காணிகள் வழங்க அரச காணிகளிக்குப் போதாத நிலை உள்ளது எனவும், இதனாலேயே தமது எதிர்கால சந்ததிகளின் நலன்கருதி இந்தப் பகுதியில் காணிகள் வழங்க முடியாது எனவும் தெரிவித்தனர்.

இதேவேளை இந்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட தனியார் நிறுவனத்திடம் கேட்டபோது, மக்கள் ஏதிர்க்கின்றனர், இதனால் மக்களின் எதிர்ப்பை மீறி தமது கோல்வ் மைதானத்துடன் கூடிய பொழுதுபோக்கு மற்றும் சுற்றுலா மையங்களை அமைக்கும் பணியை இங்கு தொடர போவதில்லை என்று தெரிவித்தனர்.




















# புதுக்குடியிருப்பில் குடும்பப் பெண் மீது அதிகாலையில் வீடு புகுந்து தாக்குதல்!

## மோப்ப நாய் சகிதம் பொலிஸார் தீவிர விசாரணை

**(பா.சதீசன்)**

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் தனிமையில் வசித்து வந்த குடும்பப் பெண் மீது வீடு புகுந்து தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

புதுக்குடியிருப்பு புதியகுடியிருப்பு கிராமத்தில் அதிகாலை 1 மணியளவில், வீட்டினுள் தாயும் மூன்று பிள்ளைகளும் உறங்கி கொண்டிருந்த வேளையில், வீட்டுக் கூரையைப் பிரித்து உள்ளே நுழைந்த இனந்தெரியாத நபர் ஒருவர், அந்தப் பெண்தலைமைத்துவ குடும்பத் தலைவி மீது தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலுக்குள்ளான பெண் கூக்குரல் இட்டமையையடுத்து அயலவர்கள் உடனடியாக சம்பவ இடத்திற்கு வந்து அவரைக் காப்பாற்றியுள்ளனர். பின்னர் அவர் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்புப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, புதுக்குடியிருப்பு பொலிஸார் தடயவியல் பொலிஸார் மற்றும் மோப்ப நாயின் உதவியுடன் சம்பவ இடத்தில் தீவிர தேடுதல் மற்றும் விசாரணைகளை மேற்கொண்டனர்.

அந்த விசாரணைகளின் போது, வீட்டிற்கு அருகாமையில் வசிக்கும் நபர் ஒருவர் விசாரணைக்காக பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். மேலும், தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் தடி ஒன்று தடயப்பொருளாக பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.


35 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாயாரே இந்தத் தாக்குதலுக்கு இலக்கானவராவார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்புப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.







# நிர்ணய விலையில் நெல்லை இன்னும் அரசு கொள்வனவு செய்யவேயில்லை!

## விவசாயிகளுக்குப் பெரும் அநியாயம் என்கிறார் சத்தியலிங்கம் எம்.பி.

அரசாங்கம் நிர்ணய விலையில் இன்னும் நெல் கொள்வனவு செய்யவில்லை, இது விவசாயிகளுக்கு செய்யும் பாரிய அநியாயமாகும் என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் இரண்டாம் பிரிவின் கீழும், அத்தியாவசிய சேவைகள் சட்டத்தின் இரண்டாம் பிரிவின்கீழும் வீசேட தீர்மானத்தைப் நாளுமன்றத்தில் நிறைவேற்றுகின்ற விவாதத்திலே கடந்த 06 ஆம் திகதி கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

எங்களுடைய பிரதேசத்திலே இப்போது 65 வீதத்திற்கும் மேற்பட்ட விவசாய நிலங்கள் அறுவடை செய்யப்பட்டு முடிந்துவிட்டது.

ஆனால் இந்த அரசாங்கத்தின் நெல் சந்தைப்படுத்தும் சபை விலை நிர்ணயத்தை செய்து இன்று வரை எங்களுடைய மாவட்டத்திலே நிர்ணயித்த விலைக்கு நெல்லை கொள்வனவு செய்யவில்லை. அரசின் ஆகக்குறைந்த கொள்வனவு விலை 120 ரூபா. ஆனால் எங்களுடைய மாவட்டத்தில் 80 ரூபாவுக்குக் கொள்வனவு செய்கிறார்கள். இது ஒரு பாரிய அநியாயம். ஒரு ஏக்கருக்கு ஒரு விவசாயி கிட்டத்தட்ட 30,000 ரூபாவை இந்த கொள்வனவினூடாக இழக்கின்றார்கள்.

இந்த அனர்த்தத்தாலே அவர்கள் ஏற்கனவே பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். இன்று நான் நெல் சந்தைப்படுத்தல் சபை தலைவரோடு பேசியபோது அடுத்த திங்கட்கிழமையில் இருந்து கொள்வனவு செய்ய இருப்பதாக அவர் சொன்னார். 70 வீதம், 75 வீதமான விவசாய நடவடிக்கைகள் நிறைவுபெற்ற பின்னர் இனி யாரிடம் கொள்வனவு செய்ய போகின்றீர்கள்? இதுதான் கடந்த வருடமும் நடந்தது.

ஆகவே தயவுசெய்து இந்த நெல் கொள்வனவை இப்போதாவது, மிகுதியாக இருக்கின்ற 30 வீதமான விவசாயிகளாவது பயனடையக்கூடிய வகையில் நீங்கள் செய்ய வேண்டும். அடுத்த வருடத்திலாவது எங்களுடைய பிரதேசத்தில் அறுவடை நடைபெறுகின்றபோது அந்த நெல்லை கொள்வனவு செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன். – எனத் தெரிவித்தார்.



# அம்பாறை பொலிஸ் தலைமையக புதிய பொறுப்பதிகாரி பதவியேற்பு

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை தலைமையக் பொலிஸ் நிலையத்தின் புதிய பொறுப்பதிகாரியாக பிரதான இன்ஸ்பெக்டர் உபுல் இந்திரஜித் குணவர்தன நேற்றுத் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

மகா சங்கத்தினரின் பிரித் ஓதலுக்கு மத்தியில் பதவியேற்புக் கடிதத்தில் அவர் கையெழுத்திட்டார்.

அம்பாறை தலைமையக பொலிஸ் நிலையத்தில் பொறுப்பதிகாரியாக இணைவதற்கு முன்பு உபுல் இந்திரஜித் குணவர்தன மாத்தளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக பணியாற்றினார்.

# கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய உற்சவத்திற்கான ஏற்பாடுகள் துரிதம்



(ந.லோகதயாளன்)

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்திற்கான ஏற்பாடுகள் துரிதகதியில் இடம்பெறுகின்றன.

கச்சதீவு அந்தோனியார் ஆலய உற்சவம் இம் மாதம் 27 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 28 ஆம் திகதி விசேட திருப்பலி பூசைகளுடன் நிறைவு பெறும்.

இந்த இரு நாள் திருவிழாவில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்குகொள்வர் எனத் திட்டமிடப்பட்டு அவர்களிற்கான இருப்பிடம், குடிதண்ணீர் உள்ளிட்ட வசதிகளுடன் இறங்குதுறை போன்ற பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இம்முறை இடம்பெறும் உற்சவத்தில் பக்கத்தர்களுக்கான சுகாதார வசதிகளுடன் பாதுகாப்பான தங்குமிட ஏற்பாடுகள் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்படுகின்றதோடு குடி தண்ணீருக்கான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப் படுகின்றது.







# பட்டதாரிகளை ஆசிரியர் சேவையில் உள்ளீர்ப்பதற்கான வர்த்தமானி அறிவிப்பில் கிழக்கு மாகாணம் புறக்கணிப்பு

(வாலகிருஸ்ணா)

பட்டதாரிகள் ஆசிரியர் சேவையில் உள்ளீர்ப்பதற்கான வெளியிடப்பட்ட வர்த்தமானியில் கிழக்கு மாகாணம் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

தமக்கான நியமனங்களை உறுதிப்படுத்தி அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இதன்போது கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

நேற்று மட்டு. ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த சங்க உறுப்பினர்கள் கூறியவை வருமாறு:-

மட்டக்களப்பு மாவட்ட வேலையில்லாப் பட்டதாரிகள் என்று சொல்வதை விட ஏமாற்றப்பட்டவர்கள் என்றே சொல்ல வேண்டும். நாங்கள் அரசாங்கத்திற்கு எதிரானவர்கள் அல்லர். எமது உரிமைகளுக்காகப் போராடுகின்றவர்கள்.

அந்த வகையில் இந்த ஆண்டில் அரசாங்கத்தினால் ஆசிரியர் சேவைக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கான சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது. இலங்கையில் அனைத்து மாகாணத்தையும் எடுத்து நோக்கும் போது கிழக்கு மாகாணம் மாத்திரம் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. அரசாங்கம் கிழக்கு மாகாணத்தில் அதிகளவான ஆசிரியர்களை ஆள்சேர்ப்புச்செய்வதாகக் கூறி அதிகளவான விளம்பரங்கள் விடப்பட்டாலும், உண்மை நிலைவரம் இந்த அறிக்கையைப் பார்க்கும் போதே தெரிய வந்துள்ளது.

அந்த அடிப்படையில் இந்த அறிக்கையின் பிரகாரம் கிழக்கு மாகாணத்தில் அதிக எண்ணிக்கையான பாடநெறிகள் தவிர்க்கப்பட்டு மிகவும் குறைந்த எண்ணிக்கையான பாடநெறிகளே - அதிலும் கலைப் பாடங்கள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டே - இந்த சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட வேலையில்லாப் பட்டதாரிகள் கடந்த ஆறு வருடங்களுக்கும் மேலாக எதுவித போட்டிப் பரீட்சைகளுக்கும் உள்வாங்கப்படாமல் இருக்கின்றார்கள். ஓன்றிரண்டு பரீட்சைகள் தோற்றினாலும் குறைந்த எண்ணிக்கையான ஆள்சேர்ப்புகளே இடம்பெற்றுள்ளன. அத்துடன் பல பரீட்சைகள் இதுவரை நடாத்தப்படாமலும் இருக்கின்றன.

2020ம் ஆண்டு தொடக்கம் இதுவரைக்கும் எந்தவித போட்டிப் பரீட்சைக்கும் மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் தோற்ற முடியாதவாறான சூழ்நிலை இருக்கின்றது. பல்கலைக்கழகங்களில் அதிக எண்ணிக்கையான பாடங்கள் இருந்த போதிலும் விரிவுரையாளர்களின் கருத்திற்கிணங்கள் நாங்கள் குறிப்பிட்ட பாடங்களைத் தெரிவு செய்து கற்றும் அப்பாடங்களுக்கான எவ்வித ஆள்சேர்ப்பு முறைகளும் இல்லாமல் இருப்பதென்பது கவலைக்குரிய விடயமாக இருக்கின்றது.

குறிப்பிட்ட சில முக்கிய பாடங்களுக்கான பரீட்சைக்கான வாய்ப்புகள் இதுவரை எமக்கு வழங்கப்படவில்லை. நாங்கள் எதுவித விசேட சலுகைகளும் கோரவில்லை. எங்களுக்கான சம வாய்ப்பையே நாங்கள் கோருகின்றோம். பல பரீட்சைகளுக்கு கட்டணங்கள் செலுத்தியுள்ள போதிலும் வேலைவாய்ப்பு எதுவும் காட்டப்படாத நிலையில் எந்த நம்பிக்கையில் பரீட்சைக்கு சமுகமளிப்பது?

எங்களுக்காக ஆதரவு வழங்க வேண்டிய கிழக்கு மாகாண அதிகாரிகள் மௌனமாக இருப்பது ஏன் என்று எமக்குத் தெரியவில்லை. இது தொடர்பில் யாரிடம் முறையிடுவதென்று தெரியாத நிலையில் ஊடகங்களை நம்பி வந்துள்ளோம்.

நாங்கள் பரீட்சைகளைப் புறக்கணிக்கவில்லை. பரீட்சை எழுதுவதற்குத் தயாராக இருக்கின்றோம். கடந்த ஆறு வருடங்களாக அதற்கான வாய்ப்புகள் இல்லாமலே தவித்துக் கொண்டிருக்கின்றோம். எனவே உரிய அதிகாரிகள் இதற்கான காரணத்தை எமக்குத் தெரியப்படுத்தி பரீட்சைக்கான வாய்ப்புகளை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இது தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர் உட்பட அனைவருக்கும் தெரியப்படுத்தியிருந்தோம். அவர்கள் எம்மைப் பொறுமையாக இருக்கும்படியாகக் கூறியிருந்தார்கள். நாங்களும் இதுவரை எதுவித எதிர்ப்பினையும் வெளிப்படுத்தாமல் இருந்தோம். ஆனால் தற்போது வெளிவந்துள்ள ஆசிரியர் ஆள்சேர்ப்பு சுற்றுநிருபமும் எமக்கு எதிராகவே இருக்கின்றது. இதன் காரணமாகவே நாங்கள் மனவேதனைக்குள்ளாகியிருக்கின்றோம்.

எமக்கு வெளிவந்த அறிக்கையும் முதலில் சிங்களத்தில் மாத்திரமே பெறப்பட்டது தற்போதே அதன் தமிழ் மொழி எமக்குக் கிடைத்துள்ளது. இதனால் எவருடனும் இது தொடர்பில் கலந்துரையாடுவதற்கு முடியவில்லை. திறந்த சுற்றுநிருபத்தின் மூலம் எமக்கான வாய்ப்புகள் அறவே இல்லை.

நாங்கள் விசேட சலுகைகள் எதுவும் கேட்கவில்லை. போட்டிப் பரீட்சைகளுக்கான வாய்ப்புகளையே தருமாறு கேட்கின்றோம். - என்று தெரிவித்தனர்.







# பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் வீற்றிருக்கும் வித்தக விநாயகர் ஆலய கும்பாபிஷேகம் நேற்று

கொழும்பு, பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் வீற்றிருக்கும் ஸ்ரீவித்தக விநாயகர் ஆலய கும்பாபிஷேகம் சிவஸ்ரீ சோம ஸ்கந்த ரமேஷ் குருக்கள் தலைமையில் பக்திப் பரவசத்துடன் நேற்றுக்காலை நடைபெற்றது. யாக பூஜை, மகா பூர்ணாகுதி மற்றும் தீபாராதனை என்பன நடைபெற்று காலை 7.05 மணி முதல் 8.33 மணிக்குள் அமைந்த சுப முகூர்த்த வேளையில், வேத பாராயணங்கள் மற்றும் மேளதாளங்கள் முழங்க மகா கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்வில் இடம்பெற்ற படங்களை காணலாம்















# இந்தியாவில் இராட்டினம் விழுந்து விபத்து: ஒருவர் உயிரிழப்பு; 13 பேர் படுகாயம்!

இந்தியாவின் ஹரியானா மாநிலத்தில் நடைபெற்ற கண்காட்சியில் இராட்டினம் விழுந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். 13 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அயனமதிக்கப்பட்டுள்ளனர்.

ஹரியானா மாநிலம், சூரஜ்குண்ட் கண்காட்சியில் சனிக்கிழமை சுமார் 15 பேருடன் இராட்டினம் திடீரென சரிந்து விழுந்து விபத்துக்குள்ளானது.

இந்த சம்பவத்தில் பணியில் இருந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் உயிரிழந்துள்ளதோடு, 13 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த சம்பவம் குறித்து விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ள நிலையில் பொலிஸ் அதிகாரி உயிரிழந்தமைக்கு ஹரியானா முதலமைச்சர் நயாப் சைனி இரங்கல் தெரிவித்துள்ளார்.

## இந்தியாவில் பறவைக் காய்ச்சல்

# தமிழ்நாடு, பீகார் மாநிலங்களில் உயிரிழந்து வருகின்றன காகங்கள்!

இந்தியா முழுவதும் H5N1 பறவைக் காய்ச்சல் தொடர்பாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் சென்னை, அடையார், காந்தி நகர், பள்ளிக்கரணை, வேளச்சேரி, திருவான்மியூர், இ.சி.ஆர். சாலை மற்றும் ஓ.எம்.ஆர். சாலை உள்ளிட்ட இடங்களில் அடுத்தடுத்து ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட காகங்கள் தொடர்ந்து உயிரிழந்துள்ளன.

இதனையடுத்து உயிரிழந்த காகங்களின் மாதிரிகளை சோதனை செய்ததில் பறவைகளுக்கு H5N1 வைரஸ் தொற்று இருந்தது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து சென்னையில் பறவைக் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகளாக அரசு விரிவான வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.

பீகார் மாநிலத்தில் காகங்கள் தொடர்ந்து உயிரிழந்து வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# அமெரிக்காவுடன் வணிகம் செய்வதில் எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லை

## தொழில் துறை அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவிப்பு

அமெரிக்காவுடன் அடுத்த 5 ஆண்டுகளில் 500 பில்லியன் டொலர் மதிப்பிலான வணிகம் மேற்கொள்வதில் எந்தவித பிரச்சினையும் இல்லை என்று மத்திய வணிகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் பியூஷ் கோயல் நேற்று தெரிவித்துள்ளார்.

நாட்டின் வளர்ந்துவரும் பொருளாதாரம் 2 டிரில்லியன் டொலர் மதிப்புடைய பொருள்கள் இறக்குமதிக்குத் தேவையான சந்தையை உருவாக்கும் எனவும் குறிப்பிட்டார்.

தற்போது அமெரிக்காவிடம் இருந்து சுமார் 300 பில்லியன் டொலர் மதிப்புடைய பொருள்களை பெற முடியும் என்றும், அவை தற்போது மற்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது எனவும் கூறினார்.

இந்தியா - அமெரிக்கா இடையிலான வணிக ஒப்பந்தம் குறித்து பிடிஐ செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் பியூஷ் கோயல் தெரிவித்துள்ளதாவது,

நாம்மால் இன்று கூட 300 மில்லியன் டாலர் மதிப்புடைய பொருள்களை அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்ய முடியும். நாம் உலகின் பல நாடுகளில் இருந்து இறக்குமதி செய்து வருகிறோம். அடுத்த 5 ஆண்டுகளில் இது 2 ரில்லியன் டொலர் மதிப்புடையதாக அதிகரிக்கும். நாட்டின் தேவை அதிகரிக்கும் என என்னால் உறுதிப்பட கூற முடியும் எனக் குறிப்பிட்டார்.

இந்தியா - அமெரிக்கா இடையிலான வணிக ஒப்பந்தத்துக்கு ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் ஒப்புதல் அளித்தார்.

இதன்படி, இந்திய பொருள்கள் மீது



விதிக்கப்பட்டிருந்த அதிகப்படியான 25 வீதமான வரி, 18 சதவீதமாக குறைக்கப்படவுள்ளது. இதோடு மட்டுமின்றி ரஷ்யாவில் இருந்து எண்ணெய் இறக்குமதி செய்வதால் விதிக்கப்பட்ட கூடுதலான 25 வீத வரியும் நீக்கப்பட்டுள்ளது.

வேளாண்மை, நிலக்கரி, எரிசக்தி, தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் அமெரிக்காவுடனான வர்த்தகத்தை 500 பில்லியன் டொலராக உயர்த்தவும் இந்தியா முடிவு செய்துள்ளது.

இந்த வணிக ஒப்பந்தப் பணிகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது என்றும் விரைவில் இரு நாடுகளும் இணைந்த ஒப்பந்தம் தொடர்பாக கூட்டறிக்கை வெளியாகும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.- என்றார்.

அமெரிக்காவுஉடனான 500 பில்லியன் வணிக ஒப்பந்தத்தில், ஏற்கெனவே ஒப்பந்தம் செய்யப்பட்ட போயிங் விமானங்களும் அடங்குமா? என்ற கேள்விக்கு பதில் அளித்த பியூஷ் கோயல்,

அமெரிக்காவில் இருந்து பெறுவதாக ஏற்கெனவே அறிவித்த இறக்குமதிகளும் 500 பில்லியன் டொலர் வணிகத்தில் அடங்கும் என்றும் அதன் தொடர்ச்சியாகவே வணிக ஒப்பந்தத்தின்படி இறக்குமதிகள் நடக்கும் எனவுக் கூறினார்.

நமக்கு விமானங்கள் தேவை. விமான என்ஜின்கள் தேவை. விமான உதிரிப் பாகங்களும் நாட்டின் தேவையாக உள்ளது. போயிங் விமானத் தேவைக்காக மட்டும் அமெரிக்காவுடன் ஏற்கெனவே 50 பில்லியன் டொலர் மதிப்பிலான வணிகம் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

அடுத்த 5 ஆண்டுகளுக்கு 80 முதல் 90 பில்லியன் டொலர் மதிப்பிலான உதிரிப் பாகங்களுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. ஆனால், தற்போது முன்பை விடத் தேவை அதிகரித்துள்ளது. டாடா நிறுவனம் இன்னும் பல தேவைகளை முன்வைத்துள்ளது. கச்சா எண்ணெய், எல்.பி.ஜி. தவிர விமானத் துறைக்கு மட்டும் 100 பில்லியன் டாலருக்கும் அதிகமான வணிகம் நடைபெறவுள்ளது என்பது என்னுடைய கணிப்பு.

எஃகு துறையில் அசுர வேகத்தில் வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கிறோம். நாம் ஏற்கெனவே 17 - 18 மில்லியன் மதிப்பிலான நிலக்கரியை இறக்குமதி செய்துகொண்டிருக்கிறோம். ஸ்டீல் துறை வளர்ச்சியால் நிலக்கரி இறக்குமதி 300 பில்லியன்வரை அதிகரிக்கலாம்.- என்றார்.

# மூத்த இராணுவ அதிகாரியை சுட்டவர் டுபாயில் கைதானார்!

மாஸ்கோவில் ரஷ்யாவின் மூத்த இராணுவ உளவுத்துறை அதிகாரியைத் துப்பாக்கியால் சுட்ட நபர், டுபாயில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று எவ்.எஸ்.பி. பாதுகாப்புச் சேவை தெரிவித்துள்ளது.

ரஷ்யாவின் இராணுவ உளவுத்துறையின் முதல் துணைத் தலைவராக பணியாற்றும் லெப்டினன்ட் ஜெனரல் விளாடிமிர் அலெக்ஸியேவ் மாஸ்கோவில் உள்ள ஒரு குடியிருப்பில் வெள்ளிக்கிழமையன்று பலமுறை துப்பாக்கியால் சுடப்பட்டுள்ளார்.

அதன் பின்னர் அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இதனையடுத்து அவர் மீது துப்பாக்கிச் சூடு தாக்குதல் நடத்தியது 60 வயதான நபர் ஒருவர் என்று சந்தேகிக்கப்பட்டது. மேலும் அவர் ஐக்கிய அரபு அமீரகத்துக்குத் தப்பிச் சென்றதாக தெரிய



வந்தது.

இந்த நிலையில் அந்த நபர் டுபாயில் வைத்துக் கைது செய்யப்பட்டார் என்று பாதுகாப்பு சேவை நேற்று ஞாயிற்றுக்கிழமை தெரிவித்துள்ளது.

கடந்த 2024 ஆம் ஆண்டு டிசெம்பர் முதல், மாஸ்கோவிலோ அல்லது அதன் அருகிலோ 3 ஜெனரல்கள் கொல்லப்பட்டனர்.

அதன் பின்னர் கடந்த ஆண்டு இறுதியில் ஒரு கொலை அரங்கேறியது. இவற்றைத் தொடர்ந்துதான் விளாடிமிர் அலெக்ஸியேவ் மீதான வெளிப்படையான படுகொலை முயற்சி, ரஷ்யாவுக்குள் மூத்த இராணுவ அதிகாரிகளை இலக்காகக் கொண்டு நடத்தப்படும் தொடர் தாக்குதல்களில் இதுவும் ஒன்றாகும்.

வெளியுறவுத்துறை அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் இதற்கு கடும் கண்டனம் தெரிவித்து, “போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான தற்போதைய பேச்சு வார்த்தைகளைத் தடம் புரளச் செய்யும் முயற்சியாக, உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கிதான் இந்தத் தாக்குதலை அரங்கேற்றினார்” என்று குற்றம்சாட்டினார்.

ஆனால், அவரது இந்த குற்றச்சாட்டுக்கு உக்ரைன் இதுவரை பதிலளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# இஸ்லாமாபாத் வழிபாட்டு தலத்தினுள் வெடிகுண்டுத் தாக்குதலில் 36 பேர் பலி!

பாகிஸ்தான் நாட்டின் தலைநகர் இஸ்லாமாபாத்தின் ஷேசாத் நகர் பகுதியில் இஸ்லாமிய மத வழிபாட்டு தலமான மசூதியில் வெள்ளிக்கிழமை மதியம் வழிபாடு நடந்துகொண்டிருந்த சமயம் நடத்தப்பட்ட வெடிகுண்டுத் தாக்குதலில் 36 பேர் காயமடைந்துள்ளனர்.

அப்பகுதியை சேர்ந்த ஏராளமான இஸ்லாமியர்கள் மத வழிபாடு செய்து கொண்டிருந்தனர். அப்போது, அந்த மத வழிபாட்டு தலத்துக்குள் உடலில் வெடிகுண்டை கட்டிக்கொண்டு வந்த சந்தேகநபர் வெடிகுண்டை வெடிக்கச் செய்தார். இந்த சம்பவத்தில் 31 பேர் உயிரிழந்தனர். மேலும், 169 பேர் படுகாயமடைந்தனர்.

இதையடுத்து படுகாயமடைந்தவர்கள் அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டனர். இந்த தற்கொலைப்படை தாக்குதலுக்கு ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தற்கொலைப் படை தாக்குதலில் பலியானோர் எண்ணிக்கை 36 ஆக அதிகரித்துள்ளது. மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த மேலும் 5 பேர் நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். இதனால், பாகிஸ்தான் தற்கொலைப்படை தாக்குதலில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 36 ஆக அதிகரித்துள்ளது.

# ஹார்வர்ட் பல்கலைக்கழகத்துடன் தொடர்பை துண்டித்தது அமெரிக்கப் பாதுகாப்புத் துறை!

## அமெ. பாதுகாப்புத் துறையான பென்டகன் அறிவிப்பு

அமெரிக்காவின் மிகவும் பழமையான மற்றும் புகழ்பெற்ற கல்வி நிறுவனமான ஹார்வர்ட் பல்கலைக் கழகத்துடனான அனைத்து கல்விசார் தொடர்புகளையும் துண்டிப்பதாக அமெரிக்க பாதுகாப்புத் துறையான பென்டகன் அறிவித்துள்ளது.

ஹார்வர்ட் பல்கலைக்கழகம் அமெரிக்காவை வெறுக்கும் செயற்பாடுகளின் மையமாக (hate-America activism) மாறிவிட்டது என்று அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் பீட் ஹெக்செத் கடுமையாகக் குற்றஞ் சாட்டியுள்ளார்.

பாதுகாப்புச் செயலாளர் ஹெக்செத் வெளியிட்டுள்ள அறிவிப்பின்படி, ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் வழங்கப்பட்டு வந்த பட்டதாரி நிலை இராணுவப் பயிற்சிகள், ஆராய்ச்சி உதவித் தொகைத் திட்டங்கள் மற்றும் சான்றிதழ் கற்கைநெறிகளை பென்டகன் நிறுத்திக்கொள்ளவுள்ளது.

இந்தப் பல்கலைக்கழகம், விழிப்புணர்வு சித்தாந்தங்களின் தொழிற்சாலையாகவும் அமெரிக்க எதிர்ப்பு தீவிரவாதிகளின் புகலிடமாகவும் உருவெடுத்துள்ளது என்று அவர் விமர்சித்துள்ளார்.



நீண்டகாலமாக எமது சிறந்த இராணுவ அதிகாரிகளை ஹார்வர்ட் பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி வைத்தோம். ஆனால், அங்கிருந்து திரும்பிவரும் அதிகாரிகள் இராணுவ வீரர்களாக இல்லாமல், உலகளாவிய மற்றும் தீவிரவாத சித்தாந்தங்கள் நிறைந்தவர்களாகவே திரும்புகின்றனர் என்று பீட் ஹெக்செத் மேலும் தெரிவித்துள்ளார்.

எனினும், தற்போது அங்கு கல்வி பயின்றுவரும் இராணுவ வீரர்கள் தமது படிப்பை நிறைவு செய்ய அனுமதி வழங்கப்படும் என்றும் எதிர்வரும் காலத்தில் இந்த உறவுகள் உத்தியோகபூர்வமாகத் துண்டிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக வளாகத்தில் ஹமாஸ் அமைப்பைக் கொண்டாடும் சூழல் நிலவுவதாகவும், யூதர்களுக்கு எதிரான தாக்குதல்கள் ஊக்குவிக்கப்படுவதாகவும் பென்டகன் குற்றம் சுமத்தியுள்ளது. இந்த அதிரடி நடவடிக்கை அமெ ரிக்கக் கல்வித்துறையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. பிற முன்னணி பல்கலைக்கழகங்களு டனான உறவுகளையும் மறுபரிசீலனை செய்யப் போவதாகப் பென்டகன் எச்சரித்துள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் -09.02.2026




தியானம் அல்லது பிரார்த்தனை மேற்கொள்வதன் மூலம் இன்றைய நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்ளலாம். இன்று வெற்றி பெறுவதற்கான உறுதி உங்களிடம் காணப்படும் முக்கிய முடிவுகள் எடுக்க இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளலாம்.

உங்கள் பணிக்கான பாராட்டு கிடைக்கும். இது உங்கள் மனதில் மகிழ்ச்சியை அதிகரிக்க உதவும்.

உங்கள் துணையிடம் நேர்மையான அன்பை வெளிப்படுத்துவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

நிதிநிலைமை இன்று சிறப்பாக இருக்கும். உங்கள் சொத்துக்கள் அதிகரிக்கும். முக்கிய முதலீடுகளில் இன்று பணத்தை சேமிக்கலாம்.

இன்று நல்ல ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள். இன்றைய நாளை நன்கு பயன்படுத்திக்கொள்ளுங்கள்.




இன்று முன்னேற்றகரமான நாளாக இருக்கும். தைரியம் மற்றும் உறுதி வெற்றிக்கு வழி வகுக்கும்.

இன்று பணியிடத்தில் வளர்ச்சி காணப்படும். நீங்கள் விரைவாகவும் எளிதாகவும் பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை கொண்டாடுவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று நிதிநிலைமையில் முன்னேற்றம் காணப்படும். உங்கள் சேமிப்பு உயரும்.

நீங்கள் இன்று ஆற்றலுடனும் ஆரோக்கியத்துடனும் காணப்படுவீர்கள். இன்றைய நாளை நன்கு பயன்படுத்திக்கொள்ளுங்கள்.




இன்று பதற்றமும் கவலையும் காணப்படும். உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி செயலாற்றுவது சிறந்தது.

இன்று பணிகள் அதிகமாக காணப்படலாம். சிறப்பாக திட்டமிட்டு மிகச் சரியாக பணிகளை ஆற்ற வேண்டும்.

உங்களின் சில கருத்துக்களை உங்கள் துணையுடன் பகிர்ந்து கொள்ள இன்றைய நாள் உகந்ததல்ல. உரையாடும் போது கவனம் தேவை.

பங்கு வர்த்தகம் மூலம் பணம் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. என்றாலும் அதிகமாக சேமிக்க இயலாது.

செரிமானம் சம்பந்தமான பிரச்சினைகள் காணப்படும். அதிக நீரைப் பருகவும்.




இன்று இழப்புகள்நேரா வண்ணம் கவனித்து செயலாற்ற வேண்டும். பொறுமையாக இருக்க வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

உங்களின் சில பணிகள் முடிக்க முடியாமல் நிலுவையில் இறக்கும். உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் துல்லியமாக முடிக்க திட்டமிட வேண்டியது அவசியம்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்பட்டு வன்மையாக நடந்து கொள்வீர்கள். உறவின் நல்லிணக்கத்தை பராமரிக்க அதனை தவிர்த்தல் நல்லது.

இன்று அதிக பொறுப்புகள் காரணமாக பணம் அதிக அளவில் செலவாகும். தேவையற்ற செலவுகளை கண்காணிக்க வேண்டும்.

வயிறு உப்பசம் காரணமாக சில பிரச்சினைகள் ஏற்படும். கார மற்றும் எண்ணெய் உணவுகளை தவிர்க்க வேண்டும். அதிக நீரைப் பருக வேண்டும்.




இன்று ஓய்வில்லாமல் உழைப்பீர்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். இன்று பயனுள்ள முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

பணி நிமித்தமான பயணம் காணப்படும். இது உங்களுக்கு புதிய வாய்ப்புகளை உருவாக்கித் தரும்.

வெளியிடங்களுக்கு சென்று இருவரும் இணைந்து மகிழ்ச்சியுடன் இன்றைய நாளை கழிப்பீர்கள்.இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் எதிர்காலத்துக்காகப் பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இதனை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.




இன்று சம்பவங்கள் உங்களுக்கு சாதகமாக அமைய உங்கள் செயல்களை திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். முக்கியமான முடிவுகளை வேறு நாளைக்கு தள்ளி வைக்க வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக இருக்கும்காரணத்தால்தவறுகள்நேரவாய்ப்புள்ளது. இன்று மிகுந்த எச்சரிக்கையும் சிறந்த திட்டமிடலும் தேவை.

இன்று அமைதியாக இருக்க வேண்டும். உங்கள் துணையுடன் கடுமையாக நடந்து கொள்வதை தவிர்க்க வேண்டும். உங்கள் துணையின் விருப்பபடி நடந்து கொண்டால் மகிழ்ச்சி நிலவும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். எனவே தேவையற்ற செலவுகளை குறைத்துக் கொள்வது அவசியம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். என்றாலும் உங்கள் கண்களுக்கு போதிய கவனமும் சிகிச்சையும் மேற்கொள்வது நல்லது.




இன்று சில ஏமாற்றங்களை சந்திக்க நேரலாம். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும். அடுத்தவர் தரும் வாக்குறுதியை நம்பாமல் உங்கள் கடின உழைப்பை நம்பி செயலாற்றினால் வெற்றி நிச்சயம்.

பணியிடச் சூழல் இன்று மகிழ்ச்சிகரமாக இருக்காது. உங்கள் சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்காது.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படுவீர்கள். இதனால் உறவில் அமைதியின்மை காணப்படும்.

இன்று சில பண வரவுகள் காணப்பட்டாலும் செலவுகளை சமாளிப்பது கடினமாக இருக்கும். உங்கள் பணத்தை சிறந்த முறையில் செலவு செய்யவும்.

உடல் உழைப்பு காரணமாக கால்களில் வலி ஏற்படலாம். முறையான உடற்பயிற்சியும் தியானமும் சிறந்தது.




ஆன்மீக ஈடுபாடு நல்ல பலன்களை அளிக்கும். பிரார்த்தனை மற்றும் இறை வழிபாடு மேற்கொள்வது சிறந்தது.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. பணிகளில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. எனவே கவனமாகப் பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் மோதல் காணப்படும். உரையாடும் போது கவனம் தேவை.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. இன்று கூடுதல் செலவுகளை சந்திக்க நேரும்.

பரபரப்பான பணிகள் காரணமாக தலைவலி அல்லது கால் வலி ஏற்படலாம். யோகா மேற்கொள்வதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் -09.02.2026




இன்று உறுதியாக நற் பலன்கள் கிடைக்கும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறக் காண்பீர்கள்.

உங்கள் பணியில் வளர்ச்சி யைக் காண்பீர்கள் . சக பணியா ளர்கள் ஆதரவாக இருப்பார்கள்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப் படுத்துவீர்கள். இதனால் உறவில் நல் லிணக்கமும் புரிந்துணர்வும் ஏற்படும்.

பூர்வீகச் சொத்து வகையில் இன்று வரவு காணப்படும். உங்கள் சேமிப்பு உயரும்.

இன்று ஆற்றலுடனும் ஆரோக்கியத்து டனும் காணப்படுவீர்கள்.




உங்கள் செயல்களை மேற் கொள்வதில் தடைகள் காணப்படும் ஒரு முடிவை செயலாக்குவதற்கு முன் ஒன்றுக்கு இரண்டு முறை யோசிக்க வேண்டும். தகவல் பரி மாற்றத்தில் குறைபாடு காணப்படும்.

சக பணியாளர்களுடன் சூடான விவாதங்கள் அல்லது அகந்தை உணர்வுகள் தலை தூக்கும். அத்தகைய சூழ்நிலையை நீங் கள் உருவாக்காமல் இருப்பது சிறந்தது.

குடும்பப் பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப் படும்.

நிதிநிலைமை சாதகமாக இருக்காது. தேவை யற்ற செலவுகளால் கவலை ஏற்படும்.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. கண்களில் கவனம் செலுத்துவது சிறந்தது.




இன்று தடைகளையும் கஷ்டங்க ளையும் சமாளிக்க வேண்டியிருக் கும். நீங்கள் முயற்சி எடுத்தால் இன்றைய நாள் உங்களுக்கு சாத கமாக வெற்றியை அளிக்கும்.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள்.

உங்களின் அகந்தைப் போக்கு காரணமாக உறவில் நல்லிணக்கம் குறைந்து காணப்படும். உங்கள் துணையின் உணர்வுகளை கருத்தில் கொண்டு மதிப்பது நல்லது.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது. கவனம் தேவை.

தேவையற்ற எண்ணங்கள் காரணமாக குழப்பம் மட்டுமன்றி தலைவலியும் ஏற்ப டும்.




உங்கள் மனதில் காணப்படும் குழப்பம் காரணமாக பாதுகாப்பற்ற உணர்வு ஏற்படும். இன்று முக் கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வும்.

உங்கள் பணிகளை மேற்கொள் வதில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும். உங்கள் பணிகளை திறமையாக ஆற்ற நீங்கள் திட்டமிட வேண்டும்.

குறைவான புரிந்துணர்வு காரணமாக உங் கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். இருவரும் மனம் திறந்து பேசிக்கொள்வது சிறந் தது.

நிதிநிலைமை அவ்வளவு சிறப்பாக இருக்காது. இன்று கூடுதல் செலவுகள் காணப்படும்.

குழந்தைகளின் ஆரோக்கியம் பற்றிய கவலை காணப்படும் அவர்களின் ஆரோக்கியத்துக்காக பணம் செலவு செய்ய நேரும்.

# திருமலை கடற்கரையில் புத்தர் சிலை விவகாரம் இன்று வழக்கு நாளில் அங்கு கவனவீர்ப்பு முஸ்தீபு



(எஸ்.கீதபொன்கலன்)

திருமலை கடற்கரையில் புத்தர் சிலையை வைத்து மேற்கொள்ளப் பட்ட சட்டவிரோத கட்டுமானம் மற்றும் சர்ச்சைக்குரிய புத்தர் சிலை விவகா ரம் தொடர்பில் கைது செய்யப்பட்டவர் களின் விடுதலையை வலியுறுத்தி இன்று 9 ஆம் திகதி சம்பந்தப்பட்ட கட்டுமா னம் அமைந்துள்ள திருகோணமலை பிரதான கடற்கரை பகுதிக்கு முன்பாக கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று மேற் கொள்ளப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள் வதற்காக வெளி இடங்களில் இருந்து பலர் வருகைதர உள்ளனர் என்வும் தெரிய வருகின்றது.

இதே வேளை இன்று திங்கட் கிழமை மேற்படி கடற்கரையோர சட்ட விரோதக் கட்டுமானம் தொடர்பிலான வழக்கு திருகோணமலை நீதிவான் நீதி மன்றத்தில் மீளவும் எடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.